விலை: சதம் 75 ★★

ஈழநாடு

THE EELANADU

மலர் 23 ஐப்பசி 25 முஹரம் 12 இதழ் 268
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 10 11-1981

யாழ் பல்கலை மாணவருக்கு மகாபொல புலமைப் பரிசில்

[அரியாலை]

வர்த்தக கப்பற்சேவை அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் மகாபொல உயர் கல்விப்புலமைப் பரிசில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் புதியாண்டிற்குத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் பல பிரிவுகளையும் சேர்ந்த சுமார் முப்பது மாணவ மாணவிகளுக்கு வழங்கப்படவிருக்கிறது.

இதற்கான கடிதங்கள் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் மாணவ மாணவிகளுக்கு மகாபொல உயர்கல்விப் புலமைப் பரிசில் நம்பிக்கை நிதிச் செயலாளரினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 14ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணியளவில் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் ஜனாதிபதியினால் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான பரிசிலும், சான்றிதழும் வழங்கப்படவிருக்கிறது.

வீட்டுத் தோட்டத்திற்கு ரூ. 2,600

[சாவகச்சேரி]

கிராம அபிவிருத்தி அமைச்சின் திட்டத்தின் கீழ் சாவகச்சேரிப்பகுதியிலுள்ள உசன், மட்டுவில் தெற்கு மாதர் சங்கங்களுக்கும், கச்சாய் தனங்கிளப்பு கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கும் தனித்தனி ரூபா 2,600 வீட்டுத் தோட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

[6-ம் பக்கம் பார்க்க]

★ ஆயிரத்து இருபத்தொரு தமிழ் ஆசிரியர்கள்:

பொதுப்பரீட்சை மூலம் தெரிவு; இடமாற்றமில்லை!

[கொழும்பு]

க. பொ. த, உயர்தர தராதரத்துடன் நியமிக்கப்படவிருக்கும் 1021 தமிழ் மொழி மூல ஆசிரியர்களும் பொதுப்பரீட்சை ஒன்றின் மூலம் தெரிவுசெய்யப்படுவார்கள். அத்துடன் மாவட்ட ரீதியாக நியமிக்கப்படவிருக்கும் இவர்களுக்கு அம்மாவட்டத்துக்கு வெளியே இடமாற்றமும் வழங்கப்படமாட்டாது.

அரசாங்கம் 5000 ஆசிரியர்களை விரைவில் நியமிக்கவிருப்பது தெரிந்ததே. அவர்களில் 1021 பேர் தமிழ்மொழி மூலம் தெரிவு செய்யப்படுவார்கள். மாவட்ட ரீதியாக வழங்கப்படவிருக்கும் இந்நியமனங்கள் பற்றி "ஈழநாடு" ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தது.

க. பொ. த. உயர்தர தராதரம்பெற்ற விண்ணப்பதாரிகளுக்கு பொதுப்பரீட்சை ஒன்றில் 50 புள்ளிகளும் அவர்களின் க. பொ. த. உயர்தர சாதாரண தர பெறுபேறுகளுக்கு 50 புள்ளிகளும் வழங்கப்படும்.

விண்ணப்பதாரி அவர் விண்ணப்பிக்கும் மாவட்டத்தையே சார்ந்தவரெனில் 15 புள்ளிகளும் அயல் மாவட்டத்தைச் சார்ந்தவரெனில் 5 புள்ளிகளும் மேலதிகமாக வழங்கப்படும்.

பாடசாலை ஒன்றில் கூலிக் கட்டணத்தில் அல்லது பாடசாலை அபிவிருத்தி சபை நிதியில் ஏற்கனவே கற்பித்துவரும் ஒருவர் அதை சரிவர நிரூபிப்பின் அதற்கும் மேலதிகமாக 10 புள்ளிகள் வழங்கப்படும். (ம)

வெள்ளத்தில் 'நீந்திய' தபால்நிலைய ஊழியர்கள்!

[யாழ்ப்பாணம்]

யாழ் பிரதம தபால் அலுவலகக் கட்டிடத்தின் உள்ளே நேற்றுப் பிற்பகல் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தினால் தபால் ஊழியர்கள், உத்தியோகத்தர்கள், அதிகாரிகள் பலரும் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். வேலைகளும் ஸ்தம்பித்தன.

நேற்றுப் பிற்பகல் பெய்த மழையைத் தொடர்ந்து தபால் அலுவலகக் கட்டிடத்தின் மேற்பரப்பு வெடிப்புகளினால் நுழைந்த மழை நீர் காரணமாக தபால் அலுவலகத்தின் தபால் அறை, தொழில் நுட்பக் கருவிகள் அறை மற்றும் முக்கிய அறைகளிலும் வெள்ளம் தேங்கி நின்றது!

மழை தொடர்ந்து பெய்தால் நிலைமை மேலும் மோசமாகி, வேலைகளே ஸ்தம்பித நிலையை அடைந்து விடும் என்று தபால் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெளிநாட்டு வங்கிக் கிளைகள்

[கொழும்பு]

பல வெளிநாட்டு வங்கிகள் இலங்கையில் கிளைகள் அமைக்க விண்ணப்பித்துள்ளன. நிதி திட்டமிடல் அமைச்சு இது பற்றி பரிசீலனை செய்து வருகிறது. (ம)

அமைச்சர்களைப்போல் போலி கையெழுத்து

22 வயது நபர் சிக்கினார்

[கொழும்பு]

பல அமைச்சர்கள், உதவி அமைச்சர்களின் கையொப்பங்களைப்போல் போலி கையெழுத்திட்டதாக சந்தேகத்தின்பேரில் 22 வயதான இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டார். இந்நபரை வத்தளை நீதிபதி திரு. உபாலி சமரவீர றிமாண்டில் வைக்கும்படி பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

வத்தளை வாசியான ஜே. பெர்னாண்டோ என்ற இந்நபர் பல அமைச்சர்களதும் பல எம். பி.க்களதும் முகவரிகளைக் கொண்ட கடிதத் தலைப்புகளை அச்சிட்டு வைத்திருந்ததாகவும், மேற்குறித்த முக்கியஸ்தர்களின் றப்பர் முத்திரைகளைச்செய்து வைத்திருந்ததாகவும் பொலிசார் கூறினர்.

பள்ளிக்கூட அனுமதி, டெலிபோன் கருவி பொருத்துதல், அரசாங்க தொடர்மாடிகளில் வீடெடுத்தல் போன்ற விஷயங்களுக்காக பலருக்கு இந்நபர் அமைச்சர்கள், எம். பி.க்களிடமிருந்து கடிதம் பெற்றுக் கொடுப்பது போல் கடிதங்களைக் கொடுத்திருப்பதாகவும் அதற்காக 1000ரூபாவரைக் கட்டணம் பெற்றுள்ளார் என்றும் பொலிசார் கூறினர்.

இந்நபர் வசித்த வீட்டை சோதனையிட்ட பொலிசார் அங்கு இவர் அமைச்சர்களின் கையெழுத்துக்களைப்போட்டு பயிற்சி செய்திருக்கும் பல கடதாசிகளைக் கைப்பற்றினார்களாம்.

ஒன்றரைக்கோடி செலவிலான யாழ்.

பொதுசன நூலக 3ம் கட்ட மாதிரி படம் அங்கீகாரம்

4000 நூல்கள் கிடைத்துள்ளன

[யாழ்ப்பாணம்]

சுமார் ஒன்றரைகோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ள யாழ் பொதுசன நூலக 3ம் கட்ட மாதிரி படத்தை யாழ் மாநகர சபையினரும் பொது நூலகக்குழுவினரும் அங்கீகரித்துள்ளனர். மாதிரிப் படத்தை கட்டடக் கலைஞர் திரு. வி. எஸ். துரைராஜா வரைந்துள்ளார்.

யாழ் பொதுசன நூல் நிலையத்தை மீள்வித்து புனர் நிர்

(6-ம் பக்கம் பார்க்க)

தொலைக்காட்சித் திட்டம் இன்று கையளிப்பு

[கொழும்பு]

ஜப்பானிய அரசின் நன்கொடையாக கட்டி முடிக்கப்பட்டு சாதன இணைப்பு வேலைகள் யாவும் பூர்த்தியாக்கப்பட்டுள்ள தேசிய தொலைக்காட்சித் திட்டம் இன்று அரசிடம் கையளிக்கப்படும்.

இதுதொடர்பான உத்தியோகபூர்வ வைபவம் இன்று காலை 9-30 மணிக்கு நடைபெறுகிறது.

இலங்கையிலுள்ள ஜப்பானிய தூதுவர் திரு: கசுஓ சீடா, அரசின் சார்பில் ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ த அல்விஸிடம் சாவியை வைபவத்தில் கையளிப்பார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்பாக இந்த "ரூபாவாஹினி மந்திரய" நிருமாணிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா அடுத்த ஆண்டு பெப்ரவரியில் இத்திட்டத்தை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைப்பார். (ம)

ஊரெழு 55,000 ரூபா நகைகள் கொள்ளை

சந்தேகநபர்கள் ஐவர் கைது! ஒருவரைத் தேடி வேட்டை

[யாழ்ப்பாணம்]

ஊரெழு மேற்கு 55,000 ரூபா நகைகள் கொள்ளை தொடர்பாக பொலிசார் 5 சந்தேக நபர்களை கைதுசெய்துள்ளனர்.

சந்தேக நபர்களான தேவராசா, செல்வேந்திரராசா, நாகேந்திரராசா, பிரேமராசா, பத்மநாதன் ஆகியோர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். மற்றொரு சந்தேகநபரான ஆனந்தனைப் பொலிசார் தேடி வருகின்றனர்.

ஊரெழு மேற்கில் உள்ள மாரிமுத்து சற்குணநாதன் வீட்டிலேயே இக்கொள்ளை கடந்தமாத இறுதியில் நடைபெற்றது.

கொள்ளையின் போது தாலியை மட்டும் தந்துவிட்டுப் போகுமாறு வீட்டுக்காரப் பெண் கேட்டபோது கொள்ளையர்கள் தாலியை மட்டும் கொடுத்துவிட்டு மற்றும் நகைகளைக் கொண்டு சென்றிருந்தனராம். (ம)

அறிவித்தல்

31-5-81இல் வன்செயலால் எமது ஸ்தாபனம் பாதிக்கப்பட்டமையால் இத்தேதிக்கு முன்பு றைக்கிளீனுக்காக தந்த உடைகளை இழந்தவர்களிடம் இருந்து அவர்களின் பற்றுசீட்டை அரசாங்க நஷ்ட ஈட்டு குழுவினிடம் ஒப்படைக்க தேவைப்படுவதால் தயவு செய்து 13-11-81ற்கு முன்னர் எமது ஸ்தாபனத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

முகாமையாளர்
சன்லைற் றைகிளீனேஸ்

(1422)

தணிக்கை

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை அமுலில் உள்ளது.

அரிய சந்தர்ப்பம்

Diploma in Hotel Management பயிற்சி மீண்டும் ஒரு புதிய வகுப்பு ஆரம்பம் 14-11-1981 O/L அல்லது N C G E படித்த இருபாலரும் சேரலாம். 12-11-1981க்கு முன் விண்ணப்பம் பத்திரத்தை நேரில் பெற்று விண்ணப்பிக்க வேண்டும்.

நாஷனல் அக்கடமி
மொம்சாக் கட்டிடம்
11, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

1427

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் இளவாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பிரமணியம் கதிர்காமத்தம்பி என்பவரின் மரணசாதனமில்லாத மரணச் சொத்துக்களின் விடயத்தில் ஈஸ்வரி இல்லம் இளவாலை.

வழக்கு இல. ரி/106

-மரணமெய்தியவர்-

கதிர்காமத்தம்பி மகள் பெண் மகேஸ்வரி ஈஸ்வரி இல்லம் இளவாலை

மனுதாரர்

எதிராக

1. கதிர்காமத்தம்பி மகள் தமயந்தி
2. கதிர்காமத்தம்பி சஞ்சலி
3. தனிடிலை சுப்பிரமணியம் (1-ம், 2-ம் எதிர்மனுதாரர்களின் பாதுகாவலர்) எல்லாரும் ஈஸ்வரி இல்லம் இளவாலை.

-எதிர்மனுதாரர்கள்-

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கானது மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதிப்பிடப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும், 1981-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 20-ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்குக்காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1981-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 30-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
சு. வ. கணேசன்
பதிவாளர்.

இ.த.அன்ரன் பாலசிங்கம்
மனுதாரரின் சட்டத்தரணி.
1417

வலது குறைந்தோருக்கான சித்திரப்போட்டி

முடிவுகள்

[அரியாலை]

சர்வதேச வலது குறைந்தோர் ஆண்டை முன்னிட்டு யாழ் பரியோவான் இன்ரறக்ட் கழகத்தின் சார்பில் "வலது குறைந்தோருக்கு உதவுதல்" என்ற தலைப்பில் நடாத்திய சித்திரப்போட்டியில் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேற்பிரிவுக்கான சித்திரப் போட்டியில் முதலாம் இடத்தை இராமநாதன் கல்லூரியைச்சேர்ந்த செல்வி ஆர். ஜெயந்தியும், இரண்டாவதாக பரியோவான் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் நிச்சிதனந் செல்வநாயகமும், மூன்றாவது இடத்தை யாழ் ஒஸ்மானியக் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் எஸ்.எ. இ. எம். நக்ஜூறானிகம் தெரிவு செய்யப்பட்டனர்.

மத்தியபிரிவுக்கான போட்டியில் முதலாம் இடத்தை ஒஸ்மானியக்கல்லூரியைச் சேர்ந்த ஏ. எம். இராசிமின்னும், இரண்டாம் இடத்தை யாழ் பரியோவான் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் எம். மகேந்திரனும் மூன்றும் இடத்தை ஒஸ்மானியக் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் எம். எஸ். எம். ஜெயக்ஷீரும் தெரிவு செய்யப்பட்டனர்.

கீழ்ப்பிரிவுக்கான போட்டியில் முதலாம் இடத்தை சென்ற் பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் வி. நிக்சனும், இரண்டாம் இடத்தை இதே கல்லூரியைச் சேர்ந்த செல்வன் வே. சுரேசும் மூன்றும் இடத்தை யாழ் திருக்குடும்ப கன்னியர் மடத்தைச் சேர்ந்த செல்வி மார்க்கோனதியும் தெரிவுசெய்யப்பட்டனர்.

கைதடி நவீல்ட் பாடசாலை மாணவர்களுக்கான போட்டியில், மேற்பிரிவில் செல்வன் எச். போல், செல்வன் எம். ஜெயதாசன், செல்வன் எம். அலிமுதீன் ஆகியோர் முதல் மூன்று இடங்களையும் பெற்றனர்.

மத்தியபிரிவுக்கான போட்டியில் செல்வன் பி. இரவீந்திரன், கே. ஜெகதீஸ்வரன், அன்ரன் ரொபேர்ட் ஆகியோர் முதல்மூன்று இடங்களையும் பெற்றனர்.

கீழ்ப்பிரிவுக்கான போட்டியில் செல்வன் எஸ். சதீஸ்குமார், எஸ். சிவசங்கரன் ஆகியோர் முதல் இரண்டு இடங்களையும் பெற்றனர்.

தத்துவ வழக்கின்
பின்னுறுதிக் கட்டளை

வவுனியா மாவட்ட
நீதிமன்றத்தில்

வவுனியா தர்மலிங்கம் வீதி 46-ம் இலக்கத்தில் வசித்த சிதம்பரப்பிள்ளை மணி கருப்பையாவின் மரணசாதனமற்ற சொத்து விடயத்தில்

காலஞ்சென்றவர்

திருமதி பவானி கருப்பையா, இல. 46, தர்மலிங்கம் வீதி, வவுனியா

விண்ணப்பதாரி

இல. ரி/518

1. செல்வன் மணி கருப்பையா திருச்செல்வம்
2. செல்வி மணி கருப்பையா சத்தியப்பிரியா (பராயமற்ற பிரதிவாதிகள்)
3. முருகேசு கருணாகரன் செல்லம் ஸ்ரோர்ஸ், வவுனியா (1-ம், 2-ம் பிரதிவாதிகளின் பாதுகாவலர்) கார்டியன்- அட். லிட்டம்

பிரதிவாதிகள்

1981-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14-ம் திகதி வவுனியா மாவட்ட நீதிபதி திரு. பே.சி.வி பெர்ணாண்டோ அவர்கள் முன்பாக இவ்வழக்கு இறுதி நடவடிக்கைக்காக, விண்ணப்பதாரியின் சட்டத்தரணி திரு. எம். சிற்றம்பலம் பிரசன்னமாக இருக்கவும் விண்ணப்பதாரியின் 1981-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14-ம் திகதிய சத்தியக்கடிதம் வாசித்தும், சீர்தூக்கிப்பார்த்தபொழுது

மேற்குறித்த விண்ணப்பதாரி மேற்குறித்த காலஞ்சென்றவரின் விதவைமனைவி என்ற முறையில் காலஞ்சென்றவரின் சொத்துரிமைகளுக்கு உரிய தத்துவப்பத்திரத்தை ஏற்பதற்கு உரித்துடையவர் என்று பிரகடனப்படுத்தப்பட்டு கட்டளையிடப்பட்டு அக்கட்டளைக்கு எதிராக மேற்குறித்த பிரதிவாதிகளோ அல்லது வேறு அக்கறையுள்ளவர்கள் யாராகிலும் காரணம் காட்ட வேண்டுமென்று தோன்றில் 1981-ம் ஆண்டு நவம்பர் மாதம் 18-ம் திகதிக்கு முன்பாக அன்றி அத்தினத்திலோ [illegible] செய்யவேண்டுமென்று கட்டளையிடப்பட்டது.

மேலும் இத்தகவல் கட்டளையிடப்படுவதாவது மேற்குறித்த 3-ம் பிரதிவாதி மேற்குறித்த 1-ம், 2-ம் பராயமற்ற பிரதிவாதிகளுக்கு பாதுகாவலராக (கார்டியன்-அட்-லிட்டம்) இவ்விடயத்தில் எல்லா விடயங்களுக்கும் நியமிக்கப்படுவதுடன் அதற்கு எதிர்மாறாக யாராவதொரு அல்லது மேற்குறித்த பிரதிவாதிகளோ தகுந்த காரணம் காட்ட இருப்பின் அவர்கள் இம்மன்றின் திருப்திக்கமைவாக 1981-ம் ஆண்டு நவம்பர் மாதம் 18-ம் திகதிக்கு முன்பாகவோ அன்றி அத்தினத்திலோ செய்ய வேண்டுமென்றும் ஆகும்.

1981-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14-ம் திகதி

மன்றுவின் கட்டளைப்படி

எஸ். இராசலிங்கம்

பதிவாளரும் பிஸ்காலும்
மாவட்ட நீதிமன்றம்,
வவுனியா. 1414

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்

முக்கிய அறிவிப்பு

எமது ஸ்தாபனத்தில் மிகுதியாக முகாமையாளராகவும் ஆவணி முதல் முகாமையாளராகவும் கடமையாற்றிய திரு. இ. க. திருச்சிற்றம்பலம் அவர்கள் எமது முகாமையிலிருந்து தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். எனவே, எமது ஸ்தாபன பணம்சம்பந்தமான கொடுக்கல்வாங்கல்களுக்கோ அன்றி பத்திரிகைச்செய்திகள் கொடுப்பதற்கோ இவர் உரிமையுடையவரல்லர் என்பதனை இவ்வறிவித்தல்மூலம் அறியத்தருகின்றேன்.

பொதுமுகாமையாளர்
சங்கானை ப. நோ. கூ. சங்கம்

1418

வெளிநாட்டிற்குப் பயணம்செய்ய விரும்புகிறீர்களா?

குறைந்த செலவில் பாஸ்போட், விசா- விமானச்சீட்டு பெற்றுக்கொள்வதற்கு நம்பிக்கையான ஸ்தாபனம்

ஒலிம்பிக் ரவல் சேவிஸ்

ஸ்பெயின் நாட்டிற்கு அன்னியச்செலாவணி தவிர்த்து- விமானச்சீட்டுக்கான கட்டணம் ரூபா 9500/- மட்டுமே

ஒலிம்பிக் ரவல் சேவிஸ்

மொம்சாக் கட்டிடம், 11 F, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம். தொலைபேசி: 7107

தலைமையகம்:

ஒலிம்பிக் ரவல் சேவிஸ்

18, பிறிஸ்டல் கட்டிடம் — கொழும்பு.
1416

இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 25-ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(10 - 11 - 81)

மேடம்- புதிய நண்பர்களுடன் பழகுவீர்கள் இன்று ஏற்படும் தொடர்புகள் எதிர்காலத்திற்கும் சிறந்த பயனை அளிக்கும் கண்ணிய வழியாலும் நன்மைகள் சேருவதற்கு இடமுண்டு வரவேற்க வேண்டிய தினம்.

இடபம்- ஒளிமயமான சூழ்நிலை உருவாகும் வீட்டில் உள்ளவர்களின் அன்பும் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும் இருமனம் கலந்தவர்கள் மத்தியில் இனிமையான சம்பவம் நடைபெறும்.

மிதுனம்- புதிய கோணத்தில் இருந்து பொருள்வரவுக்கு இடமுண்டு துணிவவே துணையெனக் கொண்டு காரியங்களை சிறப்பாகச் செய்வீர்கள் பொதுஜனத் தன்மையுடன் புகழும் தேடிவரும்.

கடகம்- புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள் அரசியல் வாதிகளுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும் எடுத்த கருமத்தை முடிப்பதில் வெற்றியடைவீர்கள் பெரியோர்கள் ஆசியும் ஆதரவும் கிடைக்கும்.

சிம்மம்- முன்னேற்றம் தடைப்படும் குறுக்குவழிக் கையீடு முயற்சியை ஏற்படுத்தலாம் எதிர்ச்சதிகாரர் போக்கால் சிலரைப் பகைத்துக் கொள்ளவும் நேரிடும் அமைதி நன்று.

கன்னி- மேற்கொண்ட மனத்துடன் செயலாற்றுவீர்கள் கலைத்துறையில் பெருமைகள் வந்துசேரும் ஆவலுடன் எதிர்பார்க்கும் கடிதம் ஒன்று கிடைக்கலாம் தொழில்துறையில் வெற்றியுண்டு.

துலாம்- தொல்லைகள் அலைமோதும் மனநிம்மதியைத் தேடி அலைவீர்கள் குழப்பத்திலும் திருப்தியிலும் இடமேற்படலாம் வைத்திய செலவுக்காக பணம் விரயமாகலாம் நண்பர்களை நம்ப வேண்டாம் மதுபானத்தைத் தவிர்க்கவும்.

விருட்சிகம்- தெய்வ நம்பிக்கை மேலோங்கி நிற்கும் இலகுக்கு ஆத்மீக விடயங்களில் அதிக ஆர்வம் ஏற்படலாம் பொதுப்பணிகளில் ஈடுபடுவதன்மூலம் பொதுமக்களின் ஆதரவைப் பெறுவீர்கள்

தனு- கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும் எதையும் திறப்புடன் செய்வதற்கு விரும்புவீர்கள் ஓவியர்கள் வாழ்க்கை ஒளிமயமாகும் சிலருக்கு இடமாற்றமும் ஏற்படலாம் கலைஞர்களுக்கு நல்லதிருப்பம்.

மகரம்- வேண்டியவர்க்கு இன்று வெளிப்பணம் தரலும் புதிய நண்பர்களை தேடிக் கொள்ளுவீர்கள் நீண்டநாள் கனவு ஒன்று நனவாகும் சகல துறைகளிலும் இன்று முன்னேற்றம் உண்டு.

கும்பம்- ஆடம்பரமான செலவுகளை இன்று தவிர்த்துக் கொள்ளவும் பூமிப் பிணக்கு இன்று பொல்லாப்பைத் தேடித்தரலாம் உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும் எதிலும் அடக்கம் வேண்டும்.

மீனம்- பணத்தை அள்ளி வீசினாலும் பலன் மட்டாகத்தான் இருக்கும் சக தொழிலாளர்களுடன் மோதல்களைத் தவிர்த்துக் கொள்ளவும் புரிந்துணர்வு மனம் புண்படாமல் பொறுமையே வேண்டும்.

சோதிடக் கலாநிதி
திருமதி க. வேலுப்பிள்ளை

வரி விளம்பரம்

பயிற்சி

வெல்டிங், வயறிங், றிவயின்டிங், மோட்டார் மெக்கானிசம், செய்முறை அறிமுறை வகுப்புகள் (14-11-81) ஆரம்பம். C. E. T., யாழ்ப்பாணக் கல்வி நிலையம், (சாந்தி சினிமா விற்குமுன்), 22, ராசமையா செட்டியார் வீதி, யாழ்ப்பாணம். 1411

விற்பனைக்கு

வந்துவிட்டன. புதிய பழைய தமிழ், ஆங்கில தட்டச்சு யந்திரங்கள், ரோனியோ மெஷின். தொடர்பு சிவராமி-சகோ, ஹாட்லி இன்கிரிரியூம், பிரதான வீதி, பருத்தித்துறை. 1376

டாக்டரின் பாவிப்பிலுள்ள KH 100 ES மொடல் நீலநிற Kawasaki மோட்டார் சைக்கிள் நல்லநிலையில் விற்பனைக்குண்டு. நவம்பர் 15-ம் திகதிக்குமுன் மாலை 4-30 தொடக்கம் 6-30 மணிவரை நேரில் பார்வையிடலாம். 17/4 A, றெயில்வே வியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். 1420

நேரடியாக ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்த ELF 350 லொறி விற்பனைக்குண்டு. க. பாலேந்திரா, 586, கண்டி றோட், அரியாலை, (235) 95, ஆஸ்பத்திரி றோட், (திருவள்ளுவர் சிலைக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். 1419

நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

கோயிலாக்கண்டி இராமகிருஷ்ண அபிவிருத்திச்சங்க அங்குராப்பணக் கூட்டம் திரு. இரா. அம்பலவாணர் தலைமையில் நடைபெற்ற போது பின்வருவோர் நடப்பு வருடத்திற்கும் அடுத்த வருடத்திற்குமான நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் வே. க. சந்திரதாச, உபதலைவர் இ. ஜெயவீரசிங்கம், செயலாளர் இ. திருஞானம், உபசெயலாளர் இ. சச்சிதானந்தன், பொருளாளர் ம. கணேஸ்வரன்.

ஆறுபேரைக்கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

நீதிமன்றகடன் வழங்குசபை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட நீதிமன்றங்கள் உள்ளடக்கிய யாழ். மேல்நீதிமன்ற கடன் வழங்கு சபை தேர்தலில் கடன்சபை புதிய செயலாளராக மேல் நீதிமன்றத்தைச் சேர்ந்த திரு. கு. சண்முகநாதனும் துணைச் செயலாளராக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தைச் சேர்ந்த எம். சிறிபத்மநாதனும் தெரிவு செய்யப்பட்டனர்.

(சபையில்) உறுப்பினர்களாக கீழ்க்காணுவோர் தெரிவு செய்யப்பட்டனர். திருவாளர்கள் ஆ. ஆனந்தநடராசா, ஈ. ஏ. தோமஸ், ஏ. ஞானவேல் [யாழ். மேல்நீதிமன்றம்] எஸ். பரராஜசிங்கம், ஏ. ஜே. அன்ரனி க. லோறன்ஸ் [யாழ். மாவட்ட நீதிமன்றம்] வி. ஆர். ஜெயராசா (யாழ். நீதவான் நீதிமன்றம்) வி. பால சுப்பிரமணியம் (வேலணை ஆரம்பநீதிமன்றம்)

சபைத்தலைவர் திரு. வி. வி. பரமநாதன் தலைமையில் நடந்த சபைக்கூட்டத்தில் இத்தெரிவு நடைபெற்றது. (ல)

மணிவாக்கு

நூதனமான காரணமொன்றும் பூதலமீதிலில்லவே இல்லை.
—யோகசுவாமிகள்

நமது நோக்கு

அற்புதச்சாதனை?

நான்கு வருடங்களுக்கு முன் நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நினைத்துப் பார்த்தால் எவ்வளவு அதிர்ச்சியும் ஏமாற்றமும் என்பதை விளக்க வேண்டியதில்லை.

கடந்த ஆட்சியில் நிகழ்ந்த நெருக்கடிகளும், தட்டுப்பாடுகளும் நீங்கிவிடுமென்றும், நாடு சுபிட்சத்தோடு முன்னேற வழி காணப்பட்டதாயும் தமது முதலாவது வரவுசெலவுத் திட்டப்பேருரையில் தெளிவுபடுத்தியிருந்தார்.

நான்கு வருடங்களுக்குப் பின் நடப்பதென்ன?

புழுதியில் விழுந்தவர் மீசையில் மண்படவில்லை என்ற தொனி அவருடைய இன்றைய பேச்சிலும் காணப்படுகின்றது. நாட்டின் நிதியமைச்சர் பதவி இவருடன் போராடும் தொழில் அந்தஸ்துப் பெற்றது. இன்றைய ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனா தொடக்கம், டபிள் டாக்டர் என். எம். வரைக்கும் பதவி வகித்தவர்கள் பட்டபாடும் பெற்ற கேடும் நாடறிந்ததே! முன்னைநாள் நிதிஅமைச்சர் பீலிக்ஸ் பண்டாரநாயக்கா நிதியைப் பறிகொடுத்து நீதியை நிலைநாட்ட எத்தனித்ததும் இந்த இடத்தில் நினைவுகூர்வது பொருத்தமானது.

இருப்பினும் இவர் எல்லோரையும் 'ஒதுக்கக்'கூடியவர் 'ரொனி' என்ற பிரசாரம் இன்னும் மடிந்துவிடவில்லை. அடுத்த வருடம் நாமிந்தப்பதவியில் தொடரமுடியுமானால் இதிலும்மிகச் சிறந்த பட்ஜெட்டை நாடு காணும் பாக்கியமிருக்கும் என்கிறார்.

இன்றைய சாதனை என்ன? 1982ம் நாட்டின் உத்தேசிக்கப்பட்ட வருமானம்; 1780 கோடி ரூபா; செலவு; 3899 கோடி ரூபா; எனவே பற்றாக்குறை- துண்டுவிழும் தொகையென்ற அவச்சத்தத்தை நாம் விரும்பவில்லை- 2118 கோடி. நாட்டின் மொத்த வருமானத்திலும் பார்க்க மிகப்பெரியதொகை பற்றாக்குறையாக காணப்படுவது நாட்டின் சரித்திரத்தில் இதுவே முதல்முறை!

இந்த அரசுக்குக் கடனுதவ, கொடையுதவ, வேற்றுநாடுகள் கங்கணங்கட்டி நிற்கின்றனவென்றும்; அவ்விதம் திரளும் பெருநிதியை எவ்வாறு செலவழிக்கலாமென்றும் குதூகலித்த நிதிஅமைச்சர் இன்று தமதும் எமதும் தலைகளை உடைக்கவேண்டிய நிலை எவ்வாறு உருவானது?

செலவழிப்பது எவ்விதம் என்றெழுந்தபெருமிதத்தில் தான் இதற்கு விடை தொக்குநிற்கின்றது. இன்றைய நிலையிலும் நிதிஉதவி கிடைத்தபடியே இருக்கின்றது; செலவழிக்க செம்மையான திட்டம் இருக்கவில்லையென்பது தெளிவு

நாட்டின் அபிவிருத்தி சமத்துவநிலையில் செயற்படவில்லையென்றும், பலதிறப்பட்ட தேவைகளுக்கு ஏற்ற நிதி ஒதுக்கீடு ஒரு திட்டத்துக்கமையவில்லையென்பதுமுடிவு. வீடமைப்பு போன்ற துறைகள் துரிதமாக இயங்கினால் வேறு பல துறைகள் உறங்கிக்கிடப்பது இந்த உண்மையை நிரூபிக்கின்றது.

திட்டமற்ற நிலையிலும் செலவு பிரமாண்டமான விரயத்தை ஏற்படுத்தியிருக்கிறதை நிதி அமைச்சரே சுட்டிக்காட்டியுள்ளார். செலவில் 30 சதம் கசிந்து ஊற்றிய பானைபோல் வீணாகப் போகுமோவென்று சந்தேகம் கொண்ட அவர் இன்று அது 50 சதத்தை எட்டிவிட்டதென்று அதிர்ச்சியும் கவலையும் அடைந்திருக்கிறார்.

அரசாங்க நிர்வாகத்தில் வீண்விரயங்கள் என்பது பொதுமக்களுக்கு ஒரு அதிசயமான செய்தியல்ல. பணவீக்கத்தால் தாக்குண்டு பரிதவிக்கும் ஏழை உழைப்பாளிகள் இது எவ்வாறு அதிகரிக்கின்றதென்பதைத் தம்பொதுஉணர்வால் கிரகிக்கமுடியாதவர்கள் அல்லர்.

நிர்வாகத்தின் உயர்மட்டத்தைப் பிடித்திருக்கும் "பூஞ்சணவனை"த் தட்டிக்கொட்ட முடியுமானால், எல்லாத்தளங்களிலும் உறைந்திருக்கும் ஊழலை அகற்ற முடியும் பெரிய சுறாக்களைத் தப்பவிட்டு சின்ன இறால்களைப் பிடிப்பதில் அர்த்தமில்லை.

'பட்ஜட்'டைச் சமாளிக்கத் தேவையான 2118 கோடி ரூபாவில் பெரும்பகுதி வெளிநாட்டு உதவியாகவிருந்தபோதும் உள்நாட்டில் தேடவேண்டிய வருமானம் கணிசமாகவேயிருக்கின்றது.

ஒவ்வொரு அமைச்சும் பொறுப்புடன் தொழிற்பட்டால் மிகப்பெரிய சிக்கனமான முறைகளைக் கண்டு உதவலாம். திட்டமிடல் அமைச்சு வெளிப்படுத்திய ஒரு தகவல் எவரையும் திடுக்கிடச் செய்யும். 1300 அரச அலுவலகங்களுக்கு அமைந்த கட்டிடங்கள் பல வருடங்களாக எவ்வித உபயோகமுமின்றி பெருஞ்செலவில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த ஒரு உதாரணம் இதனைப் போன்ற பலவிரயங்களை வெளிப்படுத்தவல்லது.

நாட்டின் அவசிய தேவைகளைக் கருத்திற் கொண்டு அவசியமற்ற அரசியல் ஆதரவு தேடுகின்ற, ஆடம்பர செலவுகளை ஈவிரக்கமின்றி வெட்டும் துணிவு அமைச்சருக்கு உண்டானால் இன்னும் நம்பிக்கை ஒளிபெற வழியுண்டு.

தாராளமான பொருளாதாரக் கொள்கை வியாபாரிகளுக்கும் தொழிலதிபர்களுக்கும் வரிச்சலுகைகள், தேவையற்ற இறக்குமதிப் பொருட்களில் நேரும்கேடு பொதுவாக சிக்கனமற்ற வாழ்க்கைமுறை - இவையெல்லாம் அரசின் கொள்கையாக அமைந்தால் சாதாரண பிரஜைகள் இருந்துவது எங்ஙனம்

ஊழியர்களின் சம்பளம் உயர்ச்சி பெறுமென்றால் அதுவும் ஏழை மக்களின் அன்றாட வாழ்வின் செலவில் எழுதப்படவேண்டியது.

இந்த நிலையில் பிரார்த்தனையைவிட வேறுவழிஏது?

கற்றவர் என்பவர் யார்?

காரைநகர் இந்துக்கல்லூரி நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற பரிசளிப்புவிழாவில், முன்னைநாள் யாழ். இந்துக்கல்லூரி அதிபர் திரு. ந. சபாரத்தினம் ஆற்றிய பேருரையின் சுருக்கம் இங்கு தரப்பட்டுள்ளது.

காரைநகர் இந்துக்கல்லூரி சுமார் 90 வருடங்களுக்குமுன் அமரர் சயம்பு என்ற ஆசிரியப் பெருந்தகையால் தொடக்கப்பட்டது.

ஆங்கிலம்

ஆங்கிலக்கல்வி அன்றைய அவசியத் தேவையாயிருந்தமையால் சயம்பு உபாத்தியாயர் அதற்கே முக்கியத்துவம் அளித்தார். வறுமையில் நலிந்திருந்த இக்கிராமத்துக்கு அவர் உருவாக்கிய மாணவர்கள் மலாய் நாடு சென்று செல்வத்தைத் தேடிக்கொடுத்தனர். கல்வி கிராம முன்னேற்றத்துக்கு உதவியது அக்காலத்தில் அந்தப் பாங்கிலென்பதை இன்று நினைவு கூருவது பொருத்தமாகும்.

இந்தக் கல்லூரியே சயம்பு உபாத்தியாயருக்கு நினைவுச் சின்னமாகவிருந்தபோதும் இக்கல்லூரி முகப்பிலே அவருடைய சிலை ஒன்று நிறுவியிருப்பது எதனை உணர்த்துகின்றது?

கற்க-நிற்க

வறுமை நீங்க, பொருள் தேட உதவிய கல்வியை மட்டும் ஸ்தாபகர் நாடினார் அல்லரென்பதையே! கல்வியறிவு பெறுவதற்காக மட்டுமல்ல, அறிந்தபடி வாழ்க்கை நடத்துவதற்காக; இல்லையேல் அறிவு பயனற்ற பொருள். அதற்காகச் செலவழித்த காலம் வீண். கற்ற கல்வி வாழ்க்கைப் பண்பாடாக வேண்டும்.

ஆத்மஞானம்

இக்கல்லூரியின் முந்திய பெயர் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் வித்தியாசாலை. சைவத்துக்கும், தமிழுக்கும் அச்சமின்றிப் போராடி அரும்பணிபுரிந்த ஞானசம்பந்தப் பெருமானின் குருபூசை தினத்தில் இப்பாடசாலையிலும், காரைநகர் சிவன் கோவிலிலும் நடைபெற்ற விழாக்களையும் மாணவர், ஆசிரியர் குதூகலத்தையும் நினைவுகூர்வதில் பெருமிதமடைகின்றேன். சுமார் 60 வருடங்களுக்குமுன் நிகழ்ந்த சம்பவங்களையும் நான் பெற்ற இன்பத்தையும் நீங்கள் பெற்று அகமகிழ்ச்சியடையவேண்டுமென்பதே எனது நோக்கம் நாங்கள் ஆன்மாக்கள் என்பது இன்றும் இங்கு நினைவுறுத்தப்பட்டுவருகிறது.

அஃது அவ்வாறாக இக்கல்லூரியைப்போல் ஆங்கிலம்கற்பித்த பாடசாலைகளுக்கு சென்ற மாணவர்கள் சம்பளம் கொடுக்கவேண்டியிருந்த காலம் அது. இன்று நிலைமை வேறு.

இலவசக்கல்வி

பணவசதி உடையவருக்குத் தான் கல்விவசதி மற்றவர்களுக்கு அது மறுக்கப்பட்ட நிலை மாறிவிட்டது. 1945 ம் ஆண்டு இலவசக் கல்வி இலங்கை முழுவதிலும் அமுலுக்கு வந்தது. ஆசிரியர்கள் தனியார் முகாமைக்காரரின் தயவில் வாழும் நிலை அகன்றது. மாணவர்கள் சம்பளக்காசு கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் நீங்கியது.

புதுயுகம்

இலங்கையின் கல்விவரலாற்றில் இது ஒரு புதிய சகாப்தத்தை தொடக்கி வைத்தது. வறிய திறமையுடைய பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் இந்த இலவசக் கல்விமுறையில் தாமும் நல்ல வளர்ச்சியடைந்து நாட்டுக்கும் அரும்பணியாற்றுகின்றனர். பணவசதியால் கல்வியை விலைக்கு வாங்கும் நிலையும், வறுமை காரணமாக திறமைசாலிகள் தத்தம் திறமைக்கேற்ப மலர்ச்சியடைய முடியாத நிலையும் இந்தநாட்டில் என்றும் திரும்பி வராமற் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு இந்தநன்மைபெற்ற இன்றைய சந்ததியினரையே சாரும்.

சமுதாய மாற்றம்

கடந்த 50 ஆண்டுகளில் உலகம் பல பாரியமாற்றங்களைக் கண்டிருக்கின்றது. இலங்கை ஒரு சிறிய நாடாகிலும் இதற்குப் புறம்பல்ல. கல்வியில் நாம் கண்ட மாற்றம், உலகில் விஞ்ஞான வளர்ச்சியால் அடைந்த மாற்றத்தின் விளைவே.

மக்கள் அனைவருக்கும் கல்வி வேண்டும் என்றும் அக்கல்வி தாய்மொழியில் பயிற்றப்பட வேண்டுமென்பது தெளிவு. இலவசக் கல்விக்குப் பின் இந்த நாடு கண்ட இரண்டாவது புரட்சிகரமான மாற்றம் இது - தாய்மொழிக் கல்வி. அரசியல் காரணமாக இதற்குப் புறம்பான வியாக்கியானம் இன்று காணப்படுகிறது.

தாய்மொழியில்

எங்கள் பாடசாலைகள் சமூகத்துடன் தொடர்பில்லாமல் ஒதுங்கிய ஸ்தாபனங்களாகக் காணப்படுவதற்கு அந்நிய மொழியில் கல்வி பயிற்றப்பட்டு வந்ததும் ஒரு காரணம். இந்நாட்டில் உலகப் புகழ்பெற்ற கவிஞரை, விஞ்ஞானியை நாம் இன்றும் காணமுடியாததும் அக்காரணம் பற்றியே!

இன்று நீங்கள் தமிழில் கல்வி கற்றுவருவது எவ்வளவு இயற்கையானதும் எளிதானதுமென்பதை நாமெல்லோரும் அறிவோம். பலதிறப்பட்ட கல்விக்கு - விஞ்ஞான, தொழில்நுட்ப, சட்ட, சாத்திர பாடங்

[6-ம் பக்கம் பார்க்க]

மக்கள் கருத்து

உலகின் இன்றைய தேவை எது?

5-11-81இல் பிரசுரமான 'ஈழநாடு' இதழின், "இன்றைய தேவை?' எனும் ஆசிரியத் தலையங்கம் பார்த்து பரவசம் அடைந்தேன். சிந்தனையைத் தட்டி உள எழுச்சியை ஊட்டுந்தன்மையில் அவ்வுரை அமைந்திருந்தது. இத்தகைய அரிய உரைகளின் சாரம் வானொலி மூலம் பரப்பக்கூடிய ஒரு காலம் வராதா? என்று எண்ணம் உதயமாகிறது. பத்திரிகைகள் மக்களின் கருத்தை மானிலத்துக்கும், மன்னவனுக்கும் (அரசுகளுக்கு) மந்திர உபதேசம் செய்யும் கருவியாக அமையவேண்டும்! இன்றும் நம்நாட்டில் சில பத்திரிகைகள் அப்பணியைச் செய்வதுகண்டு களிப்படையவேண்டியுள்ளது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் வழிகாட்டியாக, தகுதிவாய்ந்த அறிஞர்களை அமர்த்தி,] வாரத்தில் இரு தினங்களுக்காவது - பத்திரிகைகளில் வெளிவரும் கல்வி, சுகாதாரம், ஆத்மீக எழுச்சி, பொருளாதாரம் உடல் உழைப்பு, கலாசார வளர்ச்சி, நாகரிகம் என்பன போன்ற கட்டுரைகள், தலையங்கங்கள், போன்றவற்றை ஆய்வுசெய்யக்கூடிய ஒருநிகழ்ச்சியை நேரடியாகச்செய்ய முன்வருவது விரும்பத்தக்கது 'கொடையும்-கடனும்' இன்றைய நிலையில் ஒரு பொருளைக் குறிக்கும் இருசொற்கள் எனத் தாங்கள் குறிப்பிட்டிருப்பது முழுதும் உண்மை. ஆனால் இங்குகிடைக்கும் உதவிகள், கடன்கள், வசதிகள் உண்மையில் மனச்சாட்சிக்கு மாறுபாடில்லாவகையில் பயன்படுத்தப் படுகின்றனவா? ஏழைகளின் கண்ணீர் துடைக்கப்படுகின்றதா? எத்தனை மூலை முடுக்குகளில், காடுகரம்பைகளில், மிருகங்களுடன் போராடிக்கொண்டு, மனிதன், உண்ண, உடுக்க, உறங்க, ஏன் நிம்மதியாக வாழமுடியாமல் பதுங்கிடநிலையில் இன்னொரு நாட்டில் புகுந்த அன்னிய உளவாளிபோல, அச்சத்துடனும், பீதியுடனும்வாழ்கிறான். ஆன போக்குவரத்து வசதிகள் இல்லை-ஆன வைத்திய வசதிகளில்லை. கல்வி வசதியும் அப்படி. பாதுகாப்பு வசதி படுமோசம். திருடர்கள் கொடுமைகள் ஒருபுறம். பாதுகாப்புப் படைகளின் கெடுபிடிகள் ஓர் புறம். குளங்கள் திருத்தப்படவில்லை. தண்ணீர் தேக்கப்படவில்லை. கடன் வசதிகள் இல்லை. உரம் இல்லை. மருந்தில்லை. மாடாய் உழைத்த ஏழை ஏங்கித் தவித்து மடிகின்றான். அவனது குரல் மக்கள் பிரதிநிதிகளுக்குத் தெரியுமா? மந்திரிமாருக்குத்தான் தெரியுமா? உதவிகளை உரியமுறையில் உதவிட அரசுக்கு அறிவுறுத்த அறிஞர்கள்இல்லையா? பத்திரிகைகள் இல்லையா? பாராளுமன்ற உறுப்பினர்கள் இல்லையா? உல்லாசப்பயணங்களும் நடக்கட்டும். தங்கள் ஊரையும், குக்கிராமங்களையும், மக்களையும் அவர் தம் தேவைகளையும் கேட்டிட இனி யாராவது ஓடிவருவரா?

"உரமும் எண்ணையும்
ஆனைவிலை
மிளகாயும் வெங்காயமும்
பூனைவிலை"

இப்படியாயின் எப்படி ஏழை விவசாயி வாழ்வான்?

கா. இரகுநாதன்
நாயன்மார்கட்டு.

கிராமோதய சபைகள்

மக்களின் பங்களிப்பைப் பெற்று அதன் மூலம் மக்களுக்கும் நிர்வாகத்திற்குமிடையிலான ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் வகையில் அமைக்கப் பெற்றுள்ள மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் கீழ் அமையவிருக்கும் பிரதேச சபை கிராமோதய சபைகள், மூலம் மக்கள் மத்தியில் மிகவும் பின் தங்கிய நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பல இன மக்களின் சமூக பொருளாதார அபிவிருத்திகள் யாவும் வளம்பெற வாய்ப்புக் கிடைத்திருப்பது மிக வரவேற்பிற்குரிய நடைமுறையாகும்.

இதன் பிரகாரம் கீழ் மட்டத்தில் அமையவிருக்கும் கிராமோதய சபைகளில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் கூட்டுறவுச் சமாசங்கள், சனசமூக நிலையங்கள், பாடசாலை அபிவிருத்திச்சபைகள் போன்ற இன்னும் பல சமூக ஸ்தாபனங்களின் தலைவர்களும் உறுப்பினர்களாகும் உரித்துடையவராவார்கள்.

எனவே இச் சந்தர்ப்பத்தில் ஸ்தாபன ரீதியாக உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்பொழுது. சமூக வேறுபாடுகளின்றி சகல இன மக்களின் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கக் கூடிய வகையில் உறுப்பினர்களை நியமனம் செய்யவேண்டியது ஒவ்வோர் விசேட சேவை உத்தியோகத்தரின் முக்கிய கடமையாகும்.

எம். கே. இளையப்பு
"குமரகிரி"
கோப்பாய்

உகண்டாவில் வன்செயல் 15 கிராமவாசிகள் பலி!

கம்பாலா, நவ. 9

உகண்டாவின் பல பகுதிகளிலும் வன்செயல்கள் இடம்பெற்றுவருவதாக அறிவிக்கப்பட்டது.

இவ் வன்செயல்களின்போது கம்பாலாவின் வடக்கில் 15 கிராமவாசிகள் கொல்லப்பட்டதாகவும், இவர்களின் சடலங்கள் பற்றைபொன்றிற்குள்ளிருந்து மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது!

இராணுவத்தினர் தாக்கக் கூடுமெனப் பயந்து சுமார் 8,000 கிராமவாசிகள் வேறு இடங்களுக்குப் பாதுகாப்புத் தேடித் தப்பியோடியுள்ளதாகக் கூறப்படுகிறது. பலர் தேவாலயங்களில் தஞ்சமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வன்செயல்களை ஒழித்து சமாதானத்தை நிலைநாட்ட உதவுமாறு உகண்டாவின் உபஜனாதிபதி திரு. முவான்ஹா மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சில தீய சக்திகளே இவ்வன்செயல்களில் ஈடுபட்டுவருவதாகவும், அவற்றை ஒழித்துக்கட்ட உகண்டா அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துவருவதாகவும் அவர் தெரிவித்தார். (லெ)

எகிப்தில் அமெ. படைகள்

வாஷிங்டன், நவ. 9

எகிப்தில் இராணுவ ஒத்திகைகளை நடத்துவதற்காக அமெரிக்கப்படைகள் அந் நாட்டிற்கு அனுப்புவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அவசியமேற்படும் பட்சத்தில் வளைகுடாப்பகுதியிலுள்ள எண்ணெய்வயல்களைப் பாதுகாக்க அமெரிக்கா தனது இந்தப் படைப்பிரிவைப் பயன்படுத்துமென்று தெரிவித்துள்ளது. [லெ]

உடுப்பிட்டி வட்டார கல்வி அதிகாரி அலுவலகம்: பிரதமகல்வி அதிகாரிபாராட்டு

(உடுப்பிட்டி)

உடுப்பிட்டி வட்டாரக்கல்வி அதிகாரியின் அலுவலகம் கவர்ச்சிகரமாகவும் சிறப்பாகவும் விளங்குவதாக யாழ். பிரதம கல்வி அதிகாரி திரு. வே. சபாநாயகம் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கல்வி வெள்ளை அறிக்கை பற்றிய கருத்தரங்கில் பேசுகையிலேயே அவர் உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரியின் அலுவலகத்தின் சிறப்பைப் பாராட்டினார்.

பிரதம கல்வி அதிகாரி திரு சபாநாயகம் அங்கு பேசுகையில் "உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரியின் அலுவலகத்திற்கு நான் திடீர் விஜயம் செய்தபோது அங்கு இக்கல்வி வட்டாரம்பற்றி விளக்கும் சித்திரங்களும் வரை படங்களும், புகைப் படங்களும் கவர்ச்சிமிக்கதாகவும் சிறப்பாகவும் இருப்பதைக் கண்டு அதிசயமும், ஆச்சரியமும் அடைந்தேன். இந்த அலுவலகத்தின் சிறப்பு ஏனைய கல்வி வட்டாரங்களுக்கு முன்மாதிரியாக விளங்குகிறது" என்றார்.

விஷ்வ இந்து பரிஷத்தின் முக்கிய நோக்கங்கள்

யோகேந்திரா துரைசுவாமி விளக்கம்

(புலோலி நிருபர்)

"இந்து தர்ம நம்பிக்கையுடன் உலகில் பரந்து வாழ்கின்ற இந்து மக்களை ஒன்றிணைத்து இந்து சமயத்திற்குப் புத்துயிரளித்து சமயசாரக் கொள்கையோடு பணிசெய்வதே விஷ்வ ஹிந்து பரிஷத்தின் முக்கிய இலட்சியமாகும். இந்து சமயத்தின் மிக அத்தியாவசியமான பண்புகளைச் செயற்படுத்தி சமய சமூக அபிவிருத்தித்துறைகள் அடங்கிய பல்வேறுதுறைகளிலும் முன்னேற்றத்தையும் மலர்ச்சியையும் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இவ்வமைப்பு விஷ்வஹிந்து பரிஷத்தற்போது மேற்கொண்டுள்ளது."

இவ்வாறு விஷ்வஹிந்து பரிஷத் (உலக இந்து மகாசபை)யின் வடமராட்சிக்கிளையை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றிய இலங்கை விஷ்வஹிந்து பரிஷத் தலைவர் திரு. யோகேந்திரா துரைசுவாமி குறிப்பிட்டார். பருத்தித்துறை சென்றல் தியேட்டர் மண்டபத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றிய திரு. யோகேந்திரா துரைசுவாமி இந்நாட் [illegible] கஷ்ட நிலைக்குள்ளாகி இருக்கும் இந்து மக்களுக்கு உதவிவழங்கி அவர்களை பல்வேறுதுறைகளிலும் மேம்பாடடையச் செய்யவேண்டும். இந்நிலையிலே இன்று விஷ்வ ஹிந்து பரிஷத் மிக முக்கியபணியை ஆற்றி வருகின்றது என்றார்.

பருத்தித்துறை நகர முதல்வர் சட்டத்தரணி எம். வேலும்மயிலும் உரையாற்றுகையில் ஆத்மீக வழியில் நாம் எம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும் அப்போது தான் வாழ்க்கையில் வெற்றி காண முடியும். மக்கள் மத்தியில் ஆத்மீகத்துறையை வளர்ச்சி அடையச்செய்வதற்கு சமய நிறுவனங்கள் மிக முக்கியமானவை. ஆனால் இந்து சமயத்தவர்கள் பொறுத்தமட்டிலே சமயநிறுவனங்கள் மிகக் குறைவாகவே இருக்கின்றன என்றார்.

நல்லை ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தம்பிரான் சுவாமிகள் ஞானப்பிரகாசசுவாமிகள் ஆகியோர் ஆசியுரை வழங்கினார்கள். யாழ். திட்டமிடல் அதிகாரி திரு. புவனேந்திரன் பருத்தித்துறை நகராண்மன்ற உறுப்பினர் திரு. திரு. மு. வெ. வீரவாகு, திரு. எஸ். க. வேலாயுதபிள்ளை திரு. வைரராசா (ஜே பி) திருமதி துரைசிங்கம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

சாட்டிலிருந்து லிபியத் துருப்புக்கள் வாபஸ்!

லண்டன், நவ. 9

மத்திய ஆபிரிக்க நாடான சாட்டிலிருந்து லிபியத் துருப்புக்கள் வாபஸ்பெறப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத்துருப்புக்களை வாபஸ் பெறுவதற்காக லிபியா பத்து விமானங்களைப் பயன்படுத்தி வருகிறது. சாட்டிலுள்ள 10,000 லிபியத் துருப்புக்களும் அங்கிருந்து ஒரு மாதகாலத்திற்குள் வாபஸ்பெறப்பட்டுவிடுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

இதன்பின்னர் சாட்டிற்கு ஆபிரிக்க ஒருமைப்பாட்டு ஸ்தாபனத்தின் படைப்பிரிவு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

சாட்டில் இடம்பெற்ற உள்நாட்டு கிளர்ச்சியை அடக்க அங்கு லிபியா தனது துருப்புக்களை அனுப்பி வைத்திருந்தது தெரிந்ததே. [லெ]

'எகிப்தின் பொருளாதார பிரச்னைக்குதீர்வுகாணுவேன்'

ஜனாதிபதி முபாரக் கூறுகிறார்

கெய்ரோ, நவ. 8

"எகிப்தின் மோசமான பொருளாதார பிரச்னைக்கு தீர்வுகாண்பதே எனது முதல் நடவடிக்கையாகும். எகிப்தில் பயங்கரவாதம் முறியடிக்கப்படும்."

மேற்கண்டவாறு எகிப்திய ஜனாதிபதி ஜனப் ஹொஸ்னி முபாரக் எகிப்தின் பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

"எகிப்திய மக்கள் ஊழல், அதிகார துர்ப்பிரயோகம், குடும்பச் செல்வாக்கு ஆகியவற்றிற்கு எதிராகப் போராட வேண்டும். எகிப்தில் நாசவேலைகளுக்கு இடமளிக்கப்படாது. இவ்வித செயல்களில் ஈடுபடுவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும்" என்றார்.

'ஆசிய பிராந்தியத்தில் நவீன ஆயுதப் பாவனை கண்டிக்கப்பட வேண்டும்'

இந்தியா - பல்கேரியா கூட்டறிக்கை

சோபியா நவ 9

"ஆசிய பிராந்தியத்தில் நவீன ஆயுதங்கள் பயன்படுத்தப்படுவது கண்டிக்கப்பட வேண்டும். வெளிநாடுகள் படைப்பலத்தை அதிகரித்து வருவது கவலைதருவதாகவுள்ளது."

மேற்கண்டவாறு இந்திய பிரதமமந்திரி திருமதி இந்திரா காந்தியின் மூன்று நாள் பல்கேரிய விஜயத்தையடுத்து பல்கேரியாவும் இந்தியாவும் வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக் கூட்டறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"இந்து சமுத்திர பிராந்தியத்திலுள்ள எல்லா கடற்படை, இராணுவ தளங்களும் அகற்றப்பட வேண்டும். உலகின் அமைதிக்காக நாடுகள் உழைக்க வேண்டும்.

"பல்கேரியாவும், இந்தியாவும் பொருளாதார, விஞ்ஞான, தொழில் நுட்பதுறைகளில் பரஸ்பரம் ஒத்துழைக்க வேண்டும்." என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்கேரிய விஜயத்தை முடித்துக் கொண்ட பிரதமர் இந்திராகாந்தி இன்று உரோமிற்கு புறப்படவுள்ளார்.

உரோமிலுள்ள உணவுவிவசாய ஸ்தாபனத்தின் கூட்டத் தொடரிலும் திருமதி இந்திராகாந்தி இன்று உரையாற்றவுள்ளார். (லெ)

ஸ்பெயினில் கொடிய வரட்சி

மட்ரிட், நவ. 9

ஸ்பெயின் நாட்டில் மிக மோசமானவரட்சிநிலவுகிறது.

இவ்வரட்சி இந்நூற்றாண்டில் இரண்டாவது தடவையாக ஸ்பெயினில் ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

கடுமையான கோடைவரட்சியும், குறைவான மழையும் காரணமாக பல நகர மக்கள் "டிரக்" வண்டிகளில் வரும் தண்ணீரை எதிர்பார்த்தே காலங்கழிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்பார்த்தளவு தானிய அறுவடையும் வரட்சிகாரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாம்.

இதனால் 8 லட்சம் தொன் தானியத்தினை இறக்குமதிசெய்வதற்கு ஸ்பெயின் அரசு தீர்மானித்துள்ளது. (கி)

தேசிய பாதுகாப்புச் சட்டம்

சென்னை, நவ. 9

கேரளத்தில் வன்முறைகளை அடக்க அவசியமேற்படும்பட்சத்தில் தேசிய பாதுகாப்புச் சட்டம் பயன்படுத்தப்படும்.'

மேற்கண்டவாறு மத்திய உள்துறை ஸ்டேட் அமைச்சர் திரு. யோகேந்திரா மக்வானா திருவனந்தபுரத்தில் நிருபர்களிடம் தெரிவித்தார். [லெ]

ஆலயங்கள் புனரமைப்பு

சென்னை, நவ. 9

தமிழ்நாடு, பாண்டிச்சேரி, கேரளம் ஆகிய மாநிலங்களிலுள்ள ஆலயங்களைப் புனரமைப்பதற்கு இம்மாநில அரசுகள் தீர்மானித்துள்ளன.

சோழர், பல்லவர் காலத்தில் கட்டப்பட்ட சந்திர மௌலீஸ்வரர் ஆலயமும் புனரமைக்கப்படவுள்ளது.

இவ்வாலயங்களைப் புனரமைப்பதற்கு இந்திய தொல்பொருள் ஆய்வுக்கழகத்தின் உதவியை இம்மாநில அரசுகள் நாடியுள்ளன. (லெ)

அரிசிஆலையில் திருட்டு சந்தேகநபர் ஒருவர் கைது

அரிசி மூடைகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

அரிசிஆலை ஒன்றில் களவு போன அரிசிமூடைகளில் ஒரு பகுதியை பொலிசார் மீட்டதுடன் சந்தேகநபர் ஒருவரையும் கைதுசெய்துள்ளனர்.

இக்களவு சம்பந்தமாக மேலும் ஒருவரையும் அரிசி மூடை கடத்தப்பட்டதாகக் கருதப்படும் கார் ஒன்றையும் பொலிசார் தேடிவருகின்றனர்.

உடுவிலுள்ள வேலுப்பிள்ளை துரைராசாவுக்கு சொந்தமான அரிசிஆலையின் பின்பக்க ஜன்னலை உடைத்துச்சென்ற திருடர்கள், காயப்போட்டிருந்த அரிசியை மூடைகளாகக் கட்டியும் நெல்லுச்சாக்குகளையும் காரில்ஏற்றிக்கொண்டு தப்பிச்சென்றுவிட்டனராம்.

இதுசம்பந்தமாக சுன்னாகம் பொலிஸ்நிலைய சப்இன்ஸ்பெக்டர் எஸ். இவராசா, சார்ஜன்ட் எஸ். சிவலிங்கம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆர். கந்தசாமி, த. குணசிங்கம் ஆகியோர் சந்தேகத்தின்பேரில் உடுவிலைச்சேர்ந்த [illegible] என்பவரைக் கைது செய்ததுடன் களவு போன அரிசிமூடைகளில் ஒரு பகுதியையும் கைப்பற்றியுள்ளனர். [மா]

திருப்பத்தூர் தேர்தல் மூப்பனார் கருத்து

சென்னை, நவ 9

"திருப்பத்தூர் சட்டசபை இடைத்தேர்தலில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளரை அ. தி. மு. க. வும், தி. மு. க. வும் ஆதரிப்பதை நான் வரவேற்கிறேன்."

மேற்கண்டவாறு இந்திரா காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. கருப்பையா மூப்பனார் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

"திருப்பத்தூர் இடைத் தேர்தலில் தமிழ்நாட்டின் இருபெரும் அரசியல் கட்சிகளான அ. தி. மு. க. வும், தி. மு. க. வும் போட்டியிடாமையினால் இந்திராகாங்கிரஸின் வெற்றி நிச்சயமாகிவிட்டது." என்றார். [லெ]

நியமனம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையில் மருத்துவ மாதாக கடமையாற்றிய திருமதி ரி. பேர்ணாண்டோபிள்ளை இம்மாதம் தொடக்கம் மேற்பார்வை பொது மருத்துவ மாதாக பதவி உயர்வு பெற்று, பருத்தித்துறை சுகாதார வைத்திய உத்தியோகத்தர் பிரிவுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

0 0 0

(மாவிட்டபுரம்)

யாழ் அபிவிருத்திச் சபையின் காங்கேசன்துறை உப அலுவலக நிர்வாக மேற்பார்வையாளராக திரு. க. சண்முகநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வலுவலகம் காங்கேசன்துறை பட்டினசபையாக முன்னர் இருந்தபோது அதன் விசேட ஆணையாளராக இவர் கடமையாற்றியிருந்தார்.

மின்கட்டணம் அதிகரிப்பு

(மாவிட்டபுரம்)

யாழ் அபிவிருத்திச்சபையின் காங்கேசன்துறை உப அலுவலக எல்லைக்குள் மின் கட்டணம் அதிகரிப்பு குறித்து மின் பாவனையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அலுவலக நிர்வாக மேற்பார்வையாளர் திரு. க. சண்முகநாதன் இந்த கட்டண அதிகரிப்பு குறித்து பாவனையாளர்களுக்கு அறிவித்துள்ளார். கடந்த ஒக்டோபர் மாதத்திலிருந்து இந்த அதிகரிப்பு அமுலுக்கு வந்துள்ளதெனவும் அதிகரிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்தி ஒத்துழைக்குமாறும் அவர் பாவனையாளர்களிடம் கோரியுள்ளார்.

இந்தப் பொருள்கள் உங்களுடையதா?

([illegible])

பல இடங்களில் கொள்ளையடிக்கப்பட்ட பலவிதமான வீட்டுப்பொருட்களும் கடைகளுக்குரிய பொருட்களும் யாழ். பொலிசாரிடம் இருக்கின்றன.

இவற்றில் பல வாரிசற்று கிடைப்பதுடன் இனம் கண்டு கொள்ளமுடியாமல் இருப்பதால் பொருட்களை இழந்தவர்கள் பொலிசாருடன் தொடர்பு கொண்டு இவற்றை அடையாளம் காணும்படி யாழ். பொலிசார் தெரிவித்துள்ளனர்.

சமீபத்தில் வடக்கில் நடைபெற்ற அசம்பாவிதங்களையும் பதற்ற நிலையையும் பயன்படுத்தி பல இடங்களிலும் கொள்ளைகளும், களவுகளும் நடைபெற்றுள்ளன.

இதில் சம்பந்தப்பட்ட அநேகமான பொருட்களை மீட்டுள்ளபோதும் இவை யாருடையவை என்பதும், எவ்விடத்துக்குரியவை என்பதும் யாழ் பொலிசாருக்கு புதிராகவே இருக்கின்றது. குத்துவிளக்குகள், டம்ளர் செட்டுக்கள், தங்கம் போன்ற வெள்ளிப் பொருட்களும், விலை உயர்ந்த சாதனங்களும் உரிமையாளர்கள் இல்லாமல் பொலிசாரிடம் இருக்கின்றன.

எனவே யாழ். மாவட்டத்தில் எவ்வகையான பொருட்களை இழந்தவர்களும் கொள்ளையடிப்புக்குள்ளான வீட்டுச் சொந்தக்காரர்களையும் யாழ். பொலிசாருடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. (எ)

[illegible] (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி- விஜயா
ராமு

Screening Till 12th
Regal Phone: 360
[Jaffna
Daily 10-30, 2-30, 4-30
6-30 & 8-30
JOHN MILLS in
The Brave
Bunch
(Action Film)
Strictly for Adults only

[illegible] (சாவகச்சேரி)
தினசரி 2-30, 6-30, 93-0
சிவாஜி - மஞ்சுளா
உத்தமன்

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி [4 காட்சிகள்
சிவாஜி — தேவிகா
பச்சை விளக்கு

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சரோஜாதேவி
பார்த்தால்
பசி தீரும்

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
விஜயலலிதா
ரிவோல்வர் ரீடா
From 12-11-81 BRUCE LEE'S
ENTER THE DRAGO

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 4-45, 7-00, 9-30
Peter Curking in
TWINS OF EVIL
(Horror Film)

ராஜா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-15, 6-15, 9-30
சிவகுமார்... ஸ்ரீகாந்த்... அல்கா
மதன மாளிகை

சாந்தி 8வது [illegible] ஜனத்திரள் வாரம்
(யாழ் நகர்) தினசரி 10-30, 2-30, 6-15 & 9-45
கமல்...
ஸ்ரீதேவி...
குரு
நம்பியார்
வெண்ணிறஆடை
நிர்மலா- முத்துராமன்-
சுந்தரராஜன்
[கலர்]

ஸ்ரீதர் தினசரி 10-30, 2-00, 4-00 7-00, 9-30
(யாழ்நகர்) Daily 4 Shows
GEORGE LAZENDY
STONER (Karate Film)

வின்ஸர் 4-வது ஜனத்திரள் வாரம்
(யாழ்ப்பாணம்)
காலை 10-30, பி.ப 2-30, 6-15, 9-30
காளி
ரஜனிகாந்த், சீமா (இருவேடம்),
விஜயகுமார், படாபட்,
சுருளிராஜன்
(கலர்)
பார்த்தவர்கள் போற்றுகிறார்கள். பல லட்ச ரூபா செலவில் உருவான பயங்கர சண்டைகள் — இனிய பாடல்கள் — நிறைந்த நெஞ்சைத் தொடும் காவியம்

"மாவட்ட சேவைகளைப் பூர்த்திசெய்ய முடியும்"

கல்வி வெள்ளை அறிக்கை கருத்தரங்கில் கல்வி அதிகாரி

(உடுப்பிட்டி)

"மாவட்டம் ஒன்றில் பணிபுரியும் ஆசிரியர்கள் வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்படாத வகையில் கல்வி வெள்ளை அறிக்கையில் இடமளிக்கப்பட்டுள்ளதால் மாவட்ட சேவைகளைப்பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும்"

இவ்வாறு யாழ் பிரதமகல்வி அதிகாரி திரு வே. சபாநாயகம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கல்வி வெள்ளை அறிக்கை பற்றிய கருத்தரங்கில் "பொது நிர்வாகமும் பாடசாலைத் தொழிற்பாடுகளும்" பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

உடுப்பிட்டித் தொகுதிக் கல்வி நிலையத்தினால் உடுப்பிட்டி கல்வி வட்டார அதிபர்களுக்கென ஒழுங்கு செய்யப்பட்ட இக் கருத்தரங்கிற்கு வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வ. க. [illegible] தலைமை வகித்தார். பிரதம கல்வி அதிகாரி திரு சபாநாயகம் தொடர்ந்து பேசுகையில்:

"கல்வி வெள்ளை அறிக்கையில் 169 விடயங்கள் பற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இந்த வெள்ளை அறிக்கையின் மூலம் தற்போது இலங்கையில் இருக்கும் 30 கல்வி மாவட்டங்களும் 24 கல்வி மாவட்டங்களாக குறைக்கப்படும். அவற்றுக்கு கல்விப் பணிப்பாளர்களும் நியமிக்கப்படுவார்கள். இதனுடன் மாவட்ட கல்வி அபிவிருத்தி வேலைகள் அந்தந்த மாவட்ட கல்விப் பணிப்பாளர்கள் மூலம் பரவலாக்கப்படும்.

"யாழ் மாவட்டத்திலுள்ள 556 பாடசாலைகளும் கொத்தணிப் பாடசாலைகளாகமாற்றி அமைக்கப்படும் போது 50 முதல் 56 வரையிலான பாடசாலைகள் இந்த அமைப்புக்குள் அடங்கும். கொத்தணிப் பாடசாலை ஆசிரியர்களின் இடமாற்றம் அப் பாடசாலை அதிபர்களின் முடிவின் பேரிலேயே வழங்கப்படுவதற்கு கல்வி வெள்ளை அறிக்கையில் பூரண அதிகாரம் கொத்தணிப் பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பின்தங்கிய பிரதேசங்களில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புப் பணம் வழங்கப்பட வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது கஷ்டப் பிரதேச ஆசிரியர்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாகும்.

புதிதாக ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படுவதற்கு முன்னர் ஆசிரியர் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. [illegible] அவர்கள் பாடசாலைக்குச்சென்றதும் கற்பித்தல் முறைகளைக் [illegible] தமது பாடங்களை சிறந்த முறையில் போதிக்க தன்னம்பிக்கை பிறக்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை. கல்வி வெள்ளை அறிக்கையில் இந்த அம்சம் வரவேற்கக் கூடியதாகும்.

"தற்போதுள்ள கல்வி அமைச்சர் கல்வியமைச்சுக்கு மாத்திரம் பொறுப்பானவராக இல்லாது இளைஞர் வேலை வாய்ப்புக்கும் அமைச்சராக விளங்குவதால் கல்வி மூலம் வேலை வாய்ப்புப் பெறுவதற்கேற்ற வகையில் கல்வி வழங்கப்பட வேண்டும் என்று கல்வி வெள்ளை அறிக்கை மூலம் திட்டமிட்டுள்ளது பாராட்டப்பட வேண்டியதாகும்" என்றார்.

உதைபந்தாட்ட போட்டிகள்

[illegible]

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் யாழ் பரியோவான் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் மூன்றாம் பிரிவுக்கான போட்டியில் இரு கோஷ்டிகளும் தலா 1 - 1 கோல்களை அடித்து சமனிலையெய்தன. இரண்டாம் பிரிவுக்கான போட்டியில் பரியோவான் கல்லூரிக் கோஷ்டி 3-1 கோல்களால் வெற்றியீட்டியது. முதலாம் பிரிவுக்கான போட்டியில் யாழ் மத்திய கல்லூரி 3-0 கோல்களால் வெற்றியீட்டியது. இப்போட்டிகள் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி

யாழ் சென்பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற முதலாம் பிரிவுக்கான உதைபந்தாட்டப்போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி 3-1 கோல்களால் வெற்றியீட்டியது. இப்போட்டி யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது:

உரும்பராய் வெற்றி

யாழ் மத்திய கல்லூரிக்கும் உரும்பராய் இந்துக்கல்லூரிக்குமிடையே நடைபெற்ற முதலாம் பிரிவுக்கான உதைபந்தாட்டப்போட்டியில் உரும்பராய் இந்துக்கல்லூரி 1-0 கோலால் வெற்றியீட்டியது. இப்போட்டி இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

பரியோவான் வெற்றி

உரும்பராய் இந்துக்கல்லூரிக்கும், யாழ் பரியோவான் கல்லூரிக்குமிடையே பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் யாழ் பரியோவான் கல்லூரிக் கோஷ்டி 4-0 கோல்களால் வெற்றியீட்டியது. இரண்டாம் பிரிவுக்கான போட்டியில் இரண்டுகோஷ்டிகளும் தலா 1-1 கோல்களைப்போட்டு சமனிலையெய்தன. முதலாம் பிரிவுக்கான போட்டி ஆரம்பம் முதல் இறுதிவரை மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றபொழுதும் பரியோவான் கல்லூரி 2-1 கோல்களால் வெற்றியீட்டியது.

தொழிற் பயிற்சி வகுப்புகள்

(உடுப்பிட்டி)

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் மேசன், தச்சுத் தொழில்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் அடுத்த வாரம் முதல் ஆரம்பமாகவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை மகாவித்தியாலய அதிபர் திரு. கே. குணரத்தினம் மேற்கொண்டு வருகின்றார்.

இம்மகா வித்தியாலயத்தில் அண்மையில் ஆங்கில சுருக்கெழுத்து, தட்டச்சுப் பயிற்சி நெறியும், முதியோருக்கான வார இறுதி ஆங்கில வகுப்பும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

சீமெந்து தட்டுப்பாடு

(மன்னார்)

மன்னார் பகுதியில் சீமெந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் மேசன் தொழிலாளர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

இதுவரை காலமும் ஒரு பக்கட் சீமெந்து 75 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டுவந்தது. சீமெந்துத்தட்டுப்பாட்டை சாதகமாகப் பயன்படுத்தி தனியார் கடைகளில் ஒரு பக்கட் சீமெந்தை 95 ரூபாவாக விற்பனை செய்துவருகின்றனர்.

மருந்துக் கலவையாளர் சங்கக்கூட்டம்

(பண்டத்தரிப்பு)

அரசாங்க மருந்துக்கலவையாளர்கள் (ஓய்வு பெற்றோர்) சங்க யாழ். மாவட்டக் கிளையின் 11-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ். நகரில் நடைபெறவுள்ளது. கிளைச் சங்கத் தலைவர் திரு. இ. வைரமுத்து தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் தாய்ச்சங்க பொதுச்செயலாளர் திரு. ரி. பி. விக்கிரமசிங்க உட்படப் பலர் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள். கிளைச்சங்கத் தலைவராகவும், கொழும்பிலுள்ள தாய்ச்சங்க மத்திய செயற்குழு உறுப்பினராகவும் நீண்டகாலம் பதவி வகித்து சேவையாற்றிய திரு. க. நடராசாவுக்கு இந்த வருடப் பொதுக் கூட்டத்தில் சங்கச் சார்பில் சேவைநலம் பாராட்டு வைபவமும் நடாத்தப்படவுள்ளது.

வைத்திய நிபுணர் இல்லை

(பண்டத்தரிப்பு)

யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் காது, மூக்கு, தொண்டை சிகிச்சைப் பிரிவுக்கு பொறுப்பான வைத்திய நிபுணர் இல்லாதிருப்பதால் இந்த வருத்தங்களுக்கு சிகிச்சை பெறச் செல்லும் நோயாளிகள் மிகவும் சிரமப்படுகின்றனர். இங்கு கடமையாற்றிய காது, மூக்கு, தொண்டை வைத்திய நிபுணர் பல மாதங்களுக்கு முன்பு தமது பதவியிலிருந்து இளைப்பாறி வெளிநாடு சென்றுவிட்டதாகவும் இந்த இடத்திற்கு வேறு வைத்திய நிபுணர் எவரும் நியமிக்கப்படாமையால் தூர இடங்களிலிருந்து சிகிச்சை பெறவரும் நோயாளிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வரிப்பரிசோதகர் மகேஸ்வரன்

(கொழும்பு)

உள்நாட்டு இறைவரித் திணைக்கள முன்னாள் வரி மதிப்பீட்டாளர் திரு. கே. மகேஸ்வரன் நைஜீரியா கடுனா மாநிலத்தில் சிரேஷ்ட வரிப் பரிசோதகராகக் கடமையாற்றிய பின்னர் நாடு திரும்பியுள்ளார்.

திரு. மகேஸ்வரன் மக்கள் வங்கி பகுதிநேர முகாமையாளராகப் பணிபுரிந்த பின்னர் பெம்புருக் அக்கடமியில் விரிவுரையாளராகவிருந்தார். அத்துடன் கொழும்பு பல்கலைக்கழகம், வித்தியோதய பல்கலைக்கழகம் ஆகியவற்றிலும் இவர் விரிவுரையாளராகவிருந்தார்.

கல்வி வெள்ளை அறிக்கை கருத்தரங்குகள்

(உடுப்பிட்டி)

யாழ். தேசிய இளைஞர் சேவை மன்றம் யாழ். மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் கல்வி வெள்ளை அறிக்கை பற்றிய கருத்தரங்குகளை நடாத்த முடிவுசெய்துள்ளது.

இதனைத் தொடர்ந்து பிரதான கருத்தரங்குகள் 15ந் திகதி பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பருத்தித்துறை மெதடிஸ்த உயர் மகளிர் கல்லூரியிலும், 14ம் திகதி கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் நடைபெறும். கருத்தரங்குகளுக்கான ஒழுங்குகளை வடமராட்சி இளைஞர் சேவை அலுவலர் செல்வி எஸ். மகேஸ்வரி மேற்கொண்டுள்ளார்.

மதுபோதையில் குழப்பம் விளைவித்தவருக்கு விளக்கமறியல்

(சாவகச்சேரி)

மது போதையிலிருந்து குழப்பம் செய்ததாக எஸ். இறிஸ் சந்திரராசா என்பவரை சாவகச்சேரி பொலிசார் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. சி. வி. விக்னேஸ்வரன் முன் ஆஜர் செய்தனர். சந்தேக நபர் தான் சுற்றவாளி என்று நீதிமன்றத்தில் கூறினார். இக்கட்டத்தில் விசாரணையைப் பிறிதொரு திகதிக்கு ஒத்திவைத்த நீதவான் நீதிமன்றத்தில் மது போதையிலிருந்து குழப்பம் செய்த இந்நபரை வைத்திய பரிசோதனைக்குட்படுத்திய போது மதுபோதையிலிருப்பது வைத்திய அதிகாரியால் உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அந்நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (கு)

வீட்டுத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முதற்கட்டமாக சோயா அவரை, சாமி, குரக்கன், சிறகவரை, கௌபீ விதைகளும், வெண்டி, புடலை என்பனவும் திருநெல்வேலி விவசாய பண்ணையிலிருந்து பெற்று விநியோகம் செய்யப்படவிருக்கிறது.

பின்னர் வாழை, மரவள்ளி, கத்தரி, மிளகாய், தக்காளி நாற்றுக்களும் வழங்கப்படவுள்ளன. இதற்கான ஒழுங்குகளைச் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. துரைராசாவும் அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர் திரு. ஆர். பரராஜசிங்கமும் ஏற்பாடு செய்துள்ளனர்.

கற்றவர்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு - உயர் நிலையில் ஆங்கிலம் அத்தியாவசியமென்பதை எவரும் அறிவர். தாய்மொழி மூலம் கல்வியென்ற இலட்சியத்துக்கு இது எவ்வகையிலும் மாறுபட்டதல்ல. இன்று ஆங்கிலம் வேண்டுமென்று ஆரவாரிக்கின்றவர்கள் இலவசக் கல்வி, தாய்மொழிக்கல்வி என்ற முற்போக்கான கொள்கைகளை விரும்பாத 'சமூகத்தின் உயர் மட்டத்தினர்.

அரசின் பொறுப்பு

செல்வர்களுக்கு ஆங்கிலக் கல்வி, வறியவர்களுக்கு முடமான தமிழ்க்கல்வி என்ற காலனி ஆட்சிமுறையில் இருந்த பாகுபாடுகள் நீங்கிய நிலையில் அனைவருக்கும் அவர்களின் திறமைக்கேற்ற கல்வியைத் தனியார் தயவில் பொறுக்கவிடுவது பொதுநல அரசுக்கழகாகாது என்ற கருத்து உதயமாகிற்று. மக்கள் கல்வி அரசின் பொறுப்பு. எனவே 1960ல் அரசாங்கம் பாடசாலைகளைச் சுவீகரித்தது இது மூன்றாவது பெருமாற்றம்.

மாறிவரும் சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு அதிகரிக்காமல், சமத்துவவாழ்வுக்கு வழிகோலும் இம்மாற்றங்கள் பல பிரச்சினைகளை உண்டாக்கிவருவது கண்கூடு. அவற்றைப் பொறுப்புடன் அணுகி தீர்வு காண்பது அரசின் கடமை.

பிரபுத்துவத்தை நிலைநாட்ட விரும்பும் பிற்போக்கான பேதங்கள் இக்கொள்கைகளை முறியடித்து தமது ஆதிக்கத்தைக் காப்பாற்ற முயல்வது இயல்பு. இந்த அபாயத்தை விழிப்புணர்வுடன் இனங்கண்டு நீக்கி ஒரு சமத்துவ சமுதாயத்தை உருவாக்க இந்த இலட்சியங்கள் பேணப்பட வேண்டும்.

கற்றவர்

நாடு வாழ்ந்தால் நாம் வாழலாம் மனிதாபிமானத்தை அடிப்படையாகக் கொண்ட இக்கருத்தை விருத்தி செய்வதே கல்வியின் நோக்கம். மனிதாபிமானம் தெய்வ பக்தியில் பிறப்பெடுக்கின்றது.

தமிழர்தம் கடவுள் நெறியைக் காக்கவும் தமிழர் வாழ்வில் புத்துணர்ச்சி பூக்கவும் உறங்கிக் கிடந்த மக்களைத் தட்டியெழுப்பிய தமிழ் ஞானசம்பந்தனின் பெருமையைப் பறைசாற்றும் இக்கலை உயர்ச்சி தரும் கல்விப்பணியைத் தொடரவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

கூட்டத் தொடக்கத்திலே பாடப்பட்ட சம்பந்தப்பெருமானின் தேவாரத்தில "கற்றவர் காய்வது காமனையே" என்று அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

இதனை மனத்தில் நிறுத்தி அதன் உண்மையை உணர முடியுமானால் நீங்கள் பாடசாலைக்குப் போகும் பயனை அடைவீர்.

மரண அறிவித்தல்

வீரசிங்கம் - பராசக்தி

சாவகச்சேரி காலஞ்சென்ற இராமலிங்கம் வீரசிங்கத்தின் மனைவியும், யோகவதி, சுந்தரலிங்கம் (முன்னாள் பாராளுமன்ற மொழிபெயர்ப்பாளர்), சுந்தரவதனன் (அமெரிக்கா) ஆகியோரின் தாயாரும், அரசரத்தினம், பராசக்தி, சகுந்தலாதேவி ஆகியோரின் மாமியும், வசந்தி, சுபத்திரா, சுமிஷ் ஆகியோரின் பேத்தியும், இளைப்பாறிய கணக்காளர் குமாரவேலுவின் சகோதரியும், பகவதியின் மைத்துனியுமாகிய பராசக்தி காலமானார். மரணச் சடங்குகள் இன்று (10-11-81) செவ்வாய்க் கிழமை மாலை 4 மணிக்கு சாவகச்சேரியில் நடைபெறும்.

"சுந்தர வாசம்"
சிவன் கோவில் வீதி,
சாவகச்சேரி.

10-11-81 1421

ரூ 2 லட்சம் செலவில் கூட்டுறவு சங்க களஞ்சியம்

(கோண்டாவில்)

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரால் சுமார் இரண்டு லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவிருக்கும் களஞ்சியத்திற்கான அடிக்கல்லை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் நல்லூர் எம். பி. யுமான திரு. மு. சிவசிதம்பரம் நாட்டிவைத்தார்.

விழாவிற்கு சங்கத் தலைவர் திரு. ந. அருணாசலம் தலைமை வகித்தார். இணுவில் மஞ்சத்தடியில் களஞ்சியத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. களஞ்சியம் கட்டுவதற்கு வெளிநாட்டின் உதவியும் பெறப்பட்டுள்ளது.

கொக்குவில் மின்பாவனையாளருக்கு இப்படியும் சோதனை

(கோண்டாவில்)

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபையின் கொக்குவில் உபபணிமனைக்கு உட்பட்ட எல்லைக்குள் வாழும் மின்பாவனையாளர்கள் சிலருக்கு மின்பாவனைக்கான கட்டணச்சிட்டை கடந்த மூன்றுமாதங்களாகக் கிடைக்கவேயில்லையாம்!

இதன் காரணமாக மின்பாவனையாளர்கள் இரண்டு மூன்று மாதத்திற்கான பாவனைப் பணத்தை ஒரே நேரத்தில் கட்டவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

மின் சிட்டை கிடைக்காதவர்களில் சிலர் தாங்களாக உபபணிமனைக்கு வந்து மின் சிட்டை தங்களுக்கு கிடைக்காதது பற்றி முறையிட்டு குறிப்பிட்ட தொகைப் பணத்தையும் கட்டியும் செல்கின்றனர்.

ஊக்குவிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மர முந்திரிகை அபிவிருத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு ஆறு கிராமங்களில் மரமுந்திரிகை நாற்று மேடைகள் அமைக்கப்படவுள்ளது. இதன் மூலம் கிடைக்கும் மர முந்திரிகைக் கன்றுகளை மன்னார் மாவட்டத்தில் மரமுந்திரிகைச் செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு அரசாங்கத்தின் உதவியுடன் விற்பனை செய்யப்படும். இதற்கான நடவடிக்கைகளை மன்னார் மாவட்ட மரமுந்திரிகை உத்தியோகத்தர் திரு. வி. சிவலிங்கம் மேற்கொண்டு வருகிறார். கு

மன்னாரில் தேசிய சேமிப்பு வங்கிக் கிளை

(மன்னார்)

மன்னாரில் தேசிய சேமிப்பு வங்கிக் கிளை ஒன்று விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. இதற்கான அனுமதியை தேசிய சேமிப்பு வங்கித் தலைவர் வழங்கியுள்ளார்.

மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபையின் முயற்சியினால் இத்தேசிய சேமிப்பு வங்கி மன்னாரில் திறந்துவைக்கப்படவுள்ளது. வெ

சிரமதானம்

(மன்னார்)

எருக்கலம்பிட்டி அரசினர் மத்திய மகாவித்தியாலய விளையாட்டு மைதானம் சிரமதானம் மூலம் திருத்தப்பட்டு விஸ்தரிக்கப்பட்டது.

எருக்கலம்பிட்டி அரசினர் மத்திய மகா வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெற்ற இச்சிரமதானவேலையில் எருக்கலம்பிட்டி பகுதி விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்தவர்களும் பாடசாலை மாணவர்களும் ஈடுபட்டிருந்தனர். (வெ)

நம்பிக்கைசொத்து நிதியங்கள்

நடைமுறைபற்றி ஆராயப்பட்டது

(அரியாலை)

யாழ். மாவட்டத்தில் தோன்றி மறைந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், மழவராயர் ஆகியோரின் பெயரால் இயங்கிவரும் நம்பிக்கைச் சொத்து நிதியங்களைப் பேணிவரும் சபைக்கு யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. க. சிவநாதன் தலைவராகவும், நம்பிக்கை நிதியங்களான பாடசாலைகளின் அதிபர்கள் செயலாளர்களாகவும் கொண்ட ஒரு குழு வடமாநில கல்விப் பணிமனையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டது.

இந்த நிதியங்களைக் காலத்துக்குக்காலம் அதிகரிக்க வேண்டிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் அதிபர்களால் எடுக்கப்படவேண்டுமென்றும், முன்னேற்ற அறிக்கைகள் காலத்துக்குக்காலம் சமர்ப்பிக்க வேண்டுமென்றும் வித்தியாதிபதியால் பணிப்புரை வழங்கப்பட்டது.

இந்த நிதியங்களை எவ்வாறு கையாளவேண்டுமென்பது தொடர்பான பூரணமான விளக்கத்தைக் கணக்காளர் திரு. திருநாவுக்கரசு சம்பந்தப்பட்ட அதிபர்களுக்கு விளக்கினார்.

இந்த நிதியங்களைப் பராமரிக்கும் ஆலோசனைக் கூட்டத்திற்கு யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. க. சிவநாதன், யாழ். பிரதம கல்வி அதிகாரி திரு. வெ. சபாநாயகம், கணக்காளர் திரு. திருநாவுக்கரசு, ஐந்து பாடசாலைகளின் அதிபர்கள், அந்நிதியங்களைப் பேணிவரும் ஏனைய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். கல்விப்பணிப்பாளரின் இந்த நடவடிக்கைகள் குறித்து நம்பிக்கை நிதியங்களைப் பராமரிக்கும் குழுவினர் நன்றி தெரிவித்தனர். இக்கடமைகள் தொடர்பான அலுவலராகத் திரு. தா. தேவமதுரம் அவர்களை கல்விப்பணிப்பாளர் நியமனஞ் செய்தார்.

வெள்ளம் தேங்கி நிற்பதை தடுக்க நடவடிக்கை

நீர்ப்பாசன பகுதி ஏற்பாடு

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழையிலிருந்து அம்பனைக்கூடாக அளவெட்டி பிணுக்கைக்குளம்வரை வெள்ள வாய்க்கால்களைச் சீர்செய்து வெள்ளம் தேங்கி நிற்பதைத் தடுக்க நீர்ப்பாசனப் பகுதியினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரிக்கு முன்பாகச் செல்லும் வெள்ள வாய்க்காலில் ஆஸ்பத்திரி கழிவு நீர் தேங்கி நின்று பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தி வருவதை தடுக்குமுகமாக மேற்படி வெள்ளவாய்க்கால் சீர்செய்து அளவெட்டி பிணுக்கை குளம் தரை நீர்செல்லக்கூடியதாக அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை கிழக்கு கிராமமுன்னேற்றச்சங்கம் ஏற்கனவே தெரிவித்திருந்த இந்த ஆலோசனையை நீர்ப்பாசனப் பகுதியினர் தற்போது செயல்படுத்த முன்வந்துள்ளனர்.

இந்த வெள்ளவாய்க்கால் சீர்செய்யும்போது வெட்டி அள்ளப்படும் மண்ணை தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலையிலும் மகாஜனக் கல்லூரியிலும், யூனியன் கல்லூரியிலும் வெள்ளம் தேங்கி நிற்கும் இடங்களுக்கு நிரப்பவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒன்றரைக்கோடி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாணித்தல் தொடர்பில நேற்று நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில யாழ் முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

தற்போது நூலகநிலையத்தின் வங்கியில 1லட்சம் ரூபா இருப்பதாகவும் 50 லட்சம் ரூபா கிடைத்ததும் கட்டட வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

இதுவரை 4000 புத்தகங்கள் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இத் திட்டத்திற்கு பெருந்தொகையான பணமும் தேவையென்றும் ஏற்கனவே வெளிநாட்டிலுள்ளவர்கள் என்ன விதமான உதவி தேவை எனக் கேட்டிருப்பதாகவும் தெரிவித்த முதல்வர் மேற்கு ஜெர்மனி அவுஸ்திரேலியா நைஜீரியா சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலிருந்து பலர் உதவியளிக்கும் பொருட்டு தொடர்பு கொண்டிருப்பதாகவும் கூறினார்

அடுத்த ஜனவரி மாதம் இதற்கான அத்திவாரமிடப்படவிருப்பதாகவும் தெரிவித்தார். (க)

மகாதேவா பால சிரமதான வேலை

(யாழ்ப்பாணம்)

பூநகரி மகாதேவா பால சிரமதான வேலைகள் நேற்று யாழ். அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையா தலைமையில் நடைபெற்றது. சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், கிளிநொச்சி எம். பி. திரு வி. ஆனந்தசங்கரி மற்றும் அரசாங்க அதிகாரிகள் கலந்து கொண்டனர். (க)

இன்று

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கல்லடி அருள்மிகு ஸ்ரீ முருகன் ஆலய விஷேட அபிஷேக உற்சவம் இன்று நடைபெறும் இரவு சிறப்பு நிகழ்ச்சியாக பிரம்மஸ்ரீ சிவ வை நித்தியானந்த சர்மா "முருகன் பெருமை" பற்றி இன்னிசை விரிவுரை நிகழ்த்துவார்.

மரண அறிவித்தல்

வைத்திலிங்கம் சரவணமுத்து

மூளாயைச்சேர்ந்த வைத்திலிங்கம் சரவணமுத்து (மலாயன் பென்ஷனர்) காலமானார் அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைக்காக இன்று (10-11-81) காலை சித்தன்கேணியிலிருந்து வழுக்கியாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார் உறவினர் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும். 1428

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 303-ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு நவம்பர் 10-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper, The General P. O. Sri Lanka Regd: Q. B. 190336/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி 7707, 889, 8186.